# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.89/2021

## அ.சா. 12 (LW 12 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மகேஸ்வரன் | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | அய்யாவு | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **05.10.2023** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது நூத்துலாபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்காக எனக்கு சம்மன் இன்று காலை நீதிமன்ற வளாகத்தில் வைத்து கோர்ட் போலீசார் கொடுத்தார்கள். அப்போது காலை சுமார் 10.15 மணி இருக்கும். அப்போது தான் என்னிடம் சம்மனில் கையொப்பம் வாங்கினார்கள். இன்று இந்த வழக்கில் சாட்சி சொல்ல வரும்படி எனக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார். அதனால் நான் வந்தேன். வந்த இடத்தில் சம்மனில் கையொப்பம் வாங்கினார்கள்.

கடந்த 04.10.2016ம் தேதி நான் நரியூத்து கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது நானும், எனது உதவியாளர் பாலமுருகேசனும் பணி நிமித்தமாக கிராமங்களை ஆய்வு செய்து கொண்டிருந்த போது, பொம்மனம்பட்டி அருகில் நிலக்கோட்டை காவல் ஆய்வாளர் இந்த வழக்கு சம்பந்தமாக சென்றவர்களை விசாரித்து கொண்டிருந்தார். அப்போது என்னையும், என் உதவியாளரையும் வழக்கு சம்பந்தமாக எங்களை விசாரிக்கும் படியும், அதில் சாட்சியாக இருக்கும்படியும் கேட்டுக்கொண்டார். அப்போது அந்த வழியாக வந்த பிரபாகரன், பரமசாமி ஆகியோர்களை விசாரித்த போது வழக்கு சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம்.எதிரி பிரபாகரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.3 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் தங்களை அழைத்து சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய வாகனத்தையும் உருட்டுக்குச்சியையும் எடுத்து தருவதாக கூறினார்கள். அதன் அடிப்படையில் நானும், என் உதவியாளரும் ஆய்வாளர் அவர்களுடன் Highways பாறையூர் பிளாட் என்ற இடத்திற்கு அழைத்து சென்று ரத்தக்கறை படிந்த இரண்டு உருட்டுக்குச்சிகளை

எதிரிகள் பிரபாகரன், பரமசாமி எடுத்துக்கொடுத்தனர். அந்த அத்தாட்சியில் நானும், கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.4 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. எதிரி பரமசாமி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் பாறையூர் அருகில் உள்ள ஓடையின் அருகே இருசக்கர வாகனம் ஒன்றை எதிரிகள் எடுத்துக்கொடுத்தனர். அதை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நானும், கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரிகளில் பிரபாகரன் இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். மற்ற எதிரியான பரமசாமி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜரில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் உருட்டுக்குச்சிகள் தான் எதிரிகள் எடுத்து ஆஜர்படுத்திய உருட்டுக்குச்சிகள். அந்த உருட்டுக்குச்சிகள் சா.பொ.1 (2 எண்ணிக்கை) ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் இருசக்கர வாகனத்தின் புகைப்படம் தான் எதிரிகள் எடுத்து ஆஜர்படுத்திய இருசக்கர வாகனம். அந்த TN 74 J 8691 என்ற இருசக்கர வாகனம் சா.பொ.2 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.10.05 17:41:28 +0530

Additional District Judge,

Dindigul.